நடவடிக்கை ஒழுங்காக இருக்கிறதா என்று அல்லது அதன்மேல் செய்த முடிவு அல்லது ஆணை சரியானதுதானா, தகுதியானது தானா சட்ட சம்மதமானதுதானா என்று மனநிறைவு பெறுவதற்காக, அதிகாரம் பெற்ற யாதொரு அதிகாரியின் ஆவணத்தை வரவழைத்துப் பரிசீலனை செய்யலாம். எந்த ஒரு நேர்விலாவது, அத்தகைய நடவடிக்கை, முடிவு, அல்லது ஆணை திருத்தப்பட வேண்டுமென, ரத்து செய்யப்பட வேண்டுமென, மாற்றியமைக்கப்பட வேண்டுமென், மறு பரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பப்பட வேண்டுமென நில ஆணையாளர் கருதினால், அவர் அவ்வண்ணமே ஆணை பிறப்பிக்கலாம்.

82-வது பிரிவின் கீழ் நில ஆணையாளர் மறு விசாரணை அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டுமென சம்பந்தப்பட்ட தரப்பினர் கேட்டுக் கொள்வதற்கான காலவரையறை எதையும் மேற்படி சட்டம் நிர்ணயிக்கவில்லை. மேற்படி சட்டத்தின் கீழ் உள்ள நடவடிக்கைகளுக்கு இறுதித் தன்மை அளிக்க, மேற்படி சட்டத்தின் கீழ் மறு விசாரணைக்காக நில ஆணையாளர்க்கு விண்ணப்பம் கொடுத்துக் கொள்வதற்கென கால வரையறை நிர்ணயிப்பது அவசியமாகும். எனவே, மேற்படி சட்டப் பிரிவின் கீழ், மறு விசாரணைக்காக மனுச் செய்து கொள்வதற்கான கால வரையறையை விதிகள் இயற்றுவதன் மூலம் நிர்ணயிப்பதற்கு அதிகாரங்கள் பெறக் கருதப்பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் இம் மன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது மணி ஒன்றரை ஆகிவிட்டது. இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன. ஹவுசிங் போர்டு மசோதாவில் விரிவாகப் பேச வேண்டும். லோகல் பிஞன்ஸ் பில்லிலும் சில மெம்பர்கள் பேச விரும்புகிறார்கள். கடந்த மசோதாவைப் போல் ஃபார்மல் மசோதாக்கள் அல்ல இவை. ஆகவே, இவற்றை நாளைக்குத் தொடர்ந்து எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று நாளை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

Nil.